வேண்டும் என்பதற்கான விதி முறைகள் வகுக்கப்பட்டு, கொள்கை அளவில் அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு செயல் படுத்த வேண்டுமென்று தான் இப்பொழுது ஸ்ரீபெரும்பூதூர்ப் பகுதியிலும், காஞ்சீபுரம் பகுதியிலும் இந்த ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. விரைவிலே இந்த ஆய்வு முடியுமானால், இதற்குரிய திட்டங்கள் தயாரிக்கப்படும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : குறிப்பிட்ட சில பகுதிகளில் இந்தத் திட்டம் அமல் படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குறிப்பிட்ட பகுதிகளை நிர்ணயிப்பதற்கு என்ன என்ன காரணங்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. எங்கே கால் நடைகள் அதிகம் இருக்கின்றனவோ, எங்கே கால்நடைகளுக்கு வியாதிகள் அதிகமாகப்பரவி, அவை பாதிக்கப்படுகின்றனவோ, அந்தப் பகுதிகளைக் கவனத்தில் வைத்துக்கொண்டு, இந்தத் திட்டம் அமலாக்கப்படும்.

More Milk Day

* 237 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the object of celebrating annually "More Milk Day"—

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பால் உற்பத்தியைப் பெருக்கி மேன்மேலும் பால் பருகுவதன் முக்கியத்துவத்தைப் பொதுவாக மக்கள் உணர வேண்டுமென்கிற நோக்கத்துடன், அரசு ஆண்டுதோறும் தமிழ்ப் புத்தாண்டு நாளன்று "பால் பெருக்கு நாளைக்" கொண்டாடுமாறு ஆணையிட்டுள்ளது.

திரு. கே. விநாயகம் : பால் உற்பத்தித் தினம் என்று சொல்லி, தமிழ்ப் புத்தாண்டு நாள் அன்று மாத்திரம் ஏழைகளுக்கோ மற்றவர்களுக்கோ பாலை வழங்கி அவர்கள் குடிக்க வேண்டும் என்று வைத்திருந்த அந்தத் திட்டத்தின் பயனாக எல்லா நாட்களிலுமே பால் வருமா ? அல்லது, ஏதோ விழா வருவதைப்போல், ஆண்டுதோறும் தமிழ்ப் புத்தாண்டு வரும்போது பால் கொடுக்கப்பட்டு, மறு நாளே அது மறைந்துவிடுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஏற்றுக்கொண்ட திட்டம் அல்ல. ஏற்கனவே இருந்து வருகிறது. தமிழ்ப் புத்தாண்டு நாளிலே வழங்கினார்கள். அதனுடைய தொடர்பாக, ஏற்கனவே எப்படி நடந்ததோ அப்படி தான் இப்போதும். நிலைமை மாறுவதற்கு, பால் உற்பத்தியை அதிகமாக்குவதற்கு வேண்டிய திட்டங்களையும் புதிய சர்க்கார் மேற்கொண்டிருக்கிறது.

DR. H. V. HANDE : What are the concrete measures that this Government propose to take to increase the quantum of milk by increasing cattle wealth?

1967 ஜூலை 10]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: நல்ல, தரமான கால்நடைகளைப் பெறுவதற்கு, க்ராஸ் ப்ரீடு மூலம் ஏற்பாடு செய்கிறோம். மாடுகளுக்குத் தீவனம் அளிப்பதற்காக எங்கெங்கு புறம்போக்கு நிலம் இருக்கிறதோ அதை மேய்ச்சல் காடாக ஆக்கிப் புல் வளரச் செய்யவேண்டும் என்று பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு யோசனை கூறியிருக்கிறோம். அதைச் செயல்படுத்துகிற முறையில் கால்நடை அபிவிருத்தி ஆகும் என்று நினைக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: 'பால் பெருக்கு நாள்' என்பதை 'பால் விநியோக நாள்' என்று மாற்ற முடியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அது ஏற்கனவே வழங்கி வந்த தினமாக இருக்கிறது. பால் பெருக்க நாளைப் பால் விநியோக நாளாக மாற்றவேண்டும் என்றால், அதற்குத் தனிக் கேள்வி போட்டால், அதுபற்றி யோசிக்கலாம்.

நகரவைத் தலைவர்கள்

* 238 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 முதல் 1966 வரையில் எந்தெந்த நகரசபைத் தலைவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(இ) அதற்கான காரணம், யார் யார்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இந்தக் கால அளவின் போது, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி நகராட்சி மன்றத் தலைவர்களை பதவியிலிருந்து ஏன் நீக்கக் கூடாது என்பதற்கான காரணம் கேட்கும் அறிவிப்புகள் அத்தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. இவற்றின் மீது முடிவான ஆணைகள் இன்னும் பிறப்பிக்கப்படவில்லை.

(இ) திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்றத் தலைவர் திரு. A.S.G. லூர்துசாமிப் பிள்ளை அவர்கள், அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு கமிஷனர் கொடுத்த அறிக்கை ஒன்றை அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டுமென்றே மறுத்துவிட்டார். மேலும், வெளியேற்றும் நடவடிக்கைகளை (Eviction Proceedings) நிறுத்திவைக்குமாறு ஆணையிட்டு, கமிஷனரின் நிர்வாக அலுவல்களிலும் குறுக்கிட்டார். எனவே, திரு. லூர்துசாமிப் பிள்ளை அவர்கள் ஏன் பதவியிலிருந்து நீக்கப்படக்கூடாது என்பதற்கான காரணம் காட்ட வேண்டுமென அரசாங்கம் 24—4—1965 தேதியுள்ள கிராம வளர்ச்சி-தல நிர்வாகத் துறையின் 958 எண் ஆணையின் மூலம் அவரைக் கேட்டுள்ளது.

தற்போதைய முதலமைச்சரின் உருவப்படத்தைத் திறந்து வைப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கும் வரை காத்திருக்கத் தவறியதற்காகவும், அரசாங்கத்தின் அனுமதி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS